# பழைய ஏற்பாட்டின் ஆய்வு

## தேர்வு விடைக்குறிப்பேடு

திப்பாசிரியர்

டாக்டர். ராண்டால்மெக்எல்வெய்ன்

shepherds
GLOBAL CLASSROOM

## *பாடம் 1*
## *பழைய ஏற்பாடு அறிமுகம்*

*(1) வேதாகமத்தை தொகுப்பதற்குக் குறிப்பிடும் "கானோன்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

> *ஒரு புத்தகம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவவார்த்தை என்பதை தீர்மானிப்பதற்கான ஒருவிதி அல்லது தரநிர்ணயம்.*

*(2) பழைய ஏற்பாட்டின் கானோனை நிறுவுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று அளவுகோல்களைப் பட்டியலிடுக.*

- *எழுத்தாளர் ஒரு தீர்க்கதரிசியாக வரமளிக்கப்பட்டிருத்தல்*
- *புத்தகம் அனைத்து தலைமுறையினருக்காவும் எழுதப்பட்டிருத்தல்.*
- *இந்தச் செய்தி முந்தைய வெளிப்பாட்டுடன் முரண்படாதிருத்தல்.*

*(3) எபிரேய வேதாகமத்தின் மூன்று பிரிவுகளைப் பட்டியலிடுக.*

- *நியாயப்பிரமாணம்*
- *தீர்க்கதரிசிகள்*
- *எழுத்துக்கள்*

*(4) கிறிஸ்தவ பழைய ஏற்பாட்டின் ஐந்து பிரிவுகளைப் பட்டியலிடுக.*

- *பஞ்சாகமம்*
- *வரலாற்றுப் புத்தகங்கள்*
- *கவிதை மற்றும் ஞானநூல்கள்*
- *பெரிய தீர்க்கதரிசிகள்*
- *சிறிய தீர்க்கதரிசிகள்*

*(5)"தெய்வீக ஏவுதல்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

*"தேவ-சுவாசத்தூண்டல் "*

*(6) "பிழையற்றது" மற்றும் "தவறிழைக்காதது" என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன?*

- *பிழையற்றது என்றால் அதில் பிழை ஏதும் இல்லை.என்று அர்த்தம்*
- *தவறிழைக்காதது என்றால் அதில் தவறு ஏதும் இல்லை என்று அர்த்தம்.*

*(7) சவக்கடல் சுருள்கள் பழைய ஏற்பாட்டினுடைய நூல்களின் துல்லியத்தை எவ்வாறு நிரூபிக்கின்றன?*

*பழைய ஏற்பாடு நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அதிகத் துல்லியத்துடன் நகலெடுக்கப்பட்டது என்பதை அவை காட்டுகின்றன.*

*(8) பழைய ஏற்பாடு இன்று நம்மோடு பேசும் மூன்று வழிகளைப் பட்டியலிடுக.*

- *இது தேவனுடைய மகத்துவத்தையும் பரிசுத்தத்தையும் கற்பிக்கிறது.*
- *இது மனிதனின் பாவம் மற்றும் மீட்பரின் தேவையைப் பற்றிக் கற்பிக்கிறது.*
- *தேவனுடைய சிறப்பு உடைமையாக ஒதுக்கப்பட்ட ஒரு பரிசுத்த ஜனத்தை உருவாக்கும் அவருடைய திட்டத்தை இது கற்பிக்கிறது.*

*(9) சங்கீதம் 19:7-11வரையிலுள்ள வசனங்களை நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

# பாடம் 2
# ஆதியாகமம்: ஆதியில்

*(1) தோரா என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் என்ன?*

*"போதித்தல்" அல்லது "நியாயப்பிரமாணம்"*

*(2) பஞ்சாகமப் புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் இயேசு எவ்வாறு காட்டப்படுகிறார்?*

- *ஆதியாகமம்: இரண்டாம் ஆதாம்*
- *யாத்திராகமம்: பஸ்கா ஆட்டுக்குட்டி*
- *லேவியராகமம்: பரிபூரணமான பலி*
- *எண்ணாகமம்: வெண்கல சர்ப்பம்*
- *உபாகமம்: வருகிறவராகிய தீர்க்கதரிசி*

*(3) பஞ்சாகமத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நான்கு பழைய ஏற்பாட்டுக் கருப்பொருள்களைப் பட்டியலிடுக.*

- *தேவனுடைய இறையாண்மை*
- *மனிதனுடைய பாவத்தன்மை*
- *இரட்சிப்புக்கான தேவனின் திட்டம்*
- *பரிசுத்தம்*

*(4) ஆதியாகமத்தின் கருப்பொருள் என்ன?*

*"ஆதியில்"*

*(5) ஆதியாகமத்தின் இரண்டு முக்கியப் பிரிவுகளைப் பட்டியலிடுக.*

- *ஆதிகாலவரலாறு (1-11)*
- *முற்பிதாக்களின் வரலாறு (12-50)*

*(6) ஆதியாகமம் 1-11இன் நான்கு முக்கிய நிகழ்வுகளைப் பட்டியலிடுக.*

- *சிருஷ்டிப்பு*
- *வீழ்ச்சி*
- *ஜலப்பிரளயம்*
- *பாபேல் கோபுரம்*

*(7) ஆதியாகமம் 12-50-ன் நான்கு முக்கிய கதாபாத்திரங்களைப் பட்டியலிடுக.*

- *ஆபிரகாம்*
- *ஈசாக்கு*
- *யாக்கோபு*
- *யோசேப்பு*

*(8) ஆபிரகாமுடனான உடன்படிக்கையின் மூன்று அம்சங்கள் ஒவ்வொன்றையும் ஒருவாக்கியத்தில் சுருக்கமாகக் கூறுக.*

- *ஆதியாகமம் 12: தேவன் ஆபிரகாமின் சந்ததியை எல்லா தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக மாற்றுவார்.*
- *ஆதியாகமம் 15: தேவன் தன்னை நித்திய உடன்படிக்கையின் இரத்தப்பிரமாணத்தின் கீழாகக் கொண்டுவருகிறார்.*
- *ஆதியாகமம் 17: விருத்தசேதனம் என்பது உடன்படிக்கையின் விசுவாசத்தின் அடையாளம்.*

*(9) சிருஷ்டிப்பைக் குறித்து ஆதியாகமம் போதிக்கும் மூன்று காரியங்களைப் பட்டியலிடுக.*

- *தேவன் உலகத்தை ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டித்தார்.*
- *இறையாண்மை கொண்ட தேவன் ஒருவர் இருக்கிறார்.*

- *மனிதன் தேவனுடையசாயலில் படைக்கப்பட்டான்.*

*(10) ஆதியாகமம் சமகாலத் திருச்சபையோடு பேசும் மூன்று வழிகளைப் பட்டியலிடுக.*

- *மனித உயிர் மதிப்புமிக்கது.*
- *நமது உலகத்தைப் பராமரிக்கும் பொறுப்பு மனிதனுடையது.*
- *திருச்சபைக்கு சுவிசேஷம் மற்றும் சீஷத்துவத்திற்கான தவிர்க்கமுடியாத கடமை `உள்ளது.*

*(11) ஆதியாகமம் 3:15 மற்றும் 12:3ஐ உங்கள் நினைவிலிருந்து எழுதுக.*

> *(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 3*
## *யாத்திராகமம் – உபாகமம்: இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பம்*

*(1) எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் புறப்பட்ட சாத்தியமான வருடம் எது?*

*கி.மு. 1446*

*(2) ஒவ்வொரு புத்தகத்திற்குமான கருப்பொருளைப் பட்டியலிடுக.*

- *யாத்திராகமம்: மீட்பு மற்றும் உறவு*
- *லேவியராகமம்: பரிசுத்தம்*
- *எண்ணாகமம்: கீழ்ப்படியாமையின் விளைவுகள்*
- *உபாகமம்: உடன்படிக்கையைப் புதுப்பித்தல்*

*(3) யாத்திராகமப் புத்தகத்தின் இரண்டு முக்கியப் பிரிவுகளைப் பட்டியலிடுக.*

- *எகிப்திலிருந்து மீட்பு (1-15)*
- *யேகோவாவுடனான உறவு (16-40))*

*(4) யாத்திராகமத்தில், எகிப்திலிருந்து இஸ்ரேல் மீட்கப்பட்டதைச் சித்தரிக்கும் நான்கு நிகழ்வுகளைப் பட்டியலிடுக.*

- *மோசேயின் பிறப்பு மற்றும் அழைப்பு*
- *பத்துவாதைகள்*
- *பஸ்கா*
- *செங்கடலைக் கடப்பது*

*(5) யாத்திராகமத்தில், யெகோவாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான உறவை நிறுவுவதைக் குறிக்கும் இரண்டு நிகழ்வுகளைப் பட்டியலிடுக.*

- *பத்து கட்டளைகளை வழங்குதல்*
- *ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுதல்*

*(6)* லேவியராகமத்திலிருந்து பலிகள் ஒவ்வொன்றையும் *அடையாளம் காண்க.*

- போஜனபலி: மற்றொரு பலியுடன் செலுத்தப்படும் ஒரு காணிக்கை பலி
- சர்வாங்கதகனபலி: பழைய ஏற்பாட்டின் முதன்மையான பலி
- குற்றநிவாரணபலி: பரிகாரம் செய்ய வேண்டிய மீறல்களைப் பற்றிக் கூறுகிறது
- பாவநிவாரணபலி: நியாயப்பிரமாணத்தை வேண்டுமென்றே மீறினதற்கானப் பரிகாரம்
- சமாதனபலி: ஆராதனை செய்பவருக்கும் தேவனுக்கும் இடையிலான ஐக்கியத்தைக் கொண்டாடுகிறது

*(7)* லேவியராகமம் *17-27* இன் **பரிசுத்தத்தின் குறியீடு** தினசரி வாழ்வில் பரிசுத்தத்தை எடுத்துக்காட்டும் விதத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்பதை இஸ்ரவேலுக்குக் கற்றுக்கொடுத்தது.

*(8) இன்று பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதர்கான நான்கு படிகளைப் பட்டியலிடுக.*

- *பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தைப் படியுங்கள்.*
- போதிக்கப்பட்ட பிரமாணம்அல்லதுவெளிப்படுத்தப்பட்ட தேவனுடையத் தன்மையைக் கண்டறியவும்.
- *நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிப்பதில் கிறிஸ்துவின் வருகையால் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தேடுங்கள்.*

- *பழைய ஏற்பாட்டின் அடிப்படையில் நவீன நடைமுறையைத் தீர்மானிக்கவும்.*

*(9) எண்ணாகமத்தின் மூன்று முக்கியப் பிரிவுகளைப் பட்டியலிடுக.*

- *சீனாயில் இஸ்ரவேலர்கள்*
- *வனாந்திரத்தில் இஸ்ரவேலர்கள்*
- *மோவாபின் சமவெளியில் இஸ்ரவேலர்கள்*

*(10) உபாகமத்தில் மோசேயின் மூன்று உரைகள்:*

- *சரித்திரம்: தேவன் என்ன செய்தார்*
- *நியாயப்பிரமாணம்: தேவன் என்னத்தை எதிர்பார்க்கிறார்*
- *தீர்க்கதரிசனம்: தேவன் என்ன செய்வார்*

*(11) யாத்திராகமம் 3:14; லேவியராகமம் 20:7–8; உபாகமம் 6:4-5 ஆகிய வசனங்களை ஞாபகத்திலிருந்து எழுதுக.*

> *(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 4*
## *யோசுவா – ரூத்:*
## *விசுவாசம் மற்றும் துரோகத்தின் சித்திரங்கள்*

*(1) எபிரேய வேதாகமத்தில் உள்ள சரித்திரப் புத்தகங்களின் பெயர் என்ன?*

*முந்தைய தீர்க்கத்தரிசிகள்*

*(2) "இறையாட்சி" என்னும் சொல்லின் வரையறையைத் தருக.*

*தேவனுடைய நேரடியான ஆட்சி*

*(3) ஒவ்வொரு புத்தகத்திற்கும் கருப்பொருளைப் பட்டியலிடுக:*

- *யோசுவா: கானானின்வெற்றி*
- *நியாயாதிபதிகள்: இஸ்ரேலில் விசுவாசத் துரோகம்*
- *ரூத்: விசுவாசத் துரோக காலத்தில் விசுவாசம்*

*(4) யோசுவாவின் இரண்டு முக்கியப் பிரிவுகளைப் பட்டியலிடுக.*

- *கானான் வெற்றி*
- *கானான் குடியேற்றம்*

*(5) யோசுவா புத்தகத்தின் முக்கிய நோக்கம் என்ன?*

*இஸ்ரவேலர்கள் தேவனுக்கு உண்மையாக இருந்தபோது தேவனுடைய உண்மைத் தன்மையைக் காட்டுவதற்காக*

*(6) அடைக்கலப் பட்டணங்களின் நோக்கம் என்ன?*

*தற்செயலாக ஒருவரைக்கொன்ற நபருக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கு*

*(7) யோசுவா புத்தகத்தில் யாவேயின் யுத்தத்தைப் படிக்கும்போது கருத்தில் கொள்ளவேண்டிய நான்கு கோட்பாடுகளைப் பட்டியலிடுக.*

- *யாவே யுத்தம் தேவனுடைய நீதியைப் பிரதிபலிக்கிறது.*
- *யாவே யுத்தம் தேவனுடைய இறையாண்மையைப் பிரதிபலிக்கிறது.*
- *யாவே யுத்தம் தேவனுடைய பரிசுத்தத்தைப் பிரதிபலிக்கிறது.*
- *யாவே யுத்தம் தேவனுடைய அன்பைப் பிரதிபலிக்கிறது.*

*(8) நியாயாதிபதிகள் புத்தகத்தின் முக்கிய நோக்கம் என்ன?*

*இஸ்ரேலினுடைய விசுவாசத் துரோகத்தின் முடிவுகளைக் காண்பிப்பதற்காக*

*(9) நியாயாதிபதிகளில் விசுவாசத்துரோகம் மற்றும் விடுதலையின் சுழற்சியின் நான்கு படிகள் யாவை?*

- *பாவம்*
- *நியாயத்தீர்ப்பின் யுத்தம்*
- *மனந்திரும்புதல்*
- *விடுதலை*

*(10) "சகோதரனின் விதவையை மணம் புரியும் வழக்கம்" என்பதன் வரையறையைத் தருக.*

*முதல் கணவரின் பெயர் மற்றும் அவரது பரம்பரை சந்ததித் தொடரும் நோக்கத்திற்காக மரித்துப்போன மனிதனின் விதவைக்கு நெருங்கிய உறவினர் மூலம் நடைபெறும் திருமணம்.*

*(11) யோசுவா 1:8-9 வரையிலுள்ள வசனங்களை நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 5*
## *சாமுவேல் – நாளாகமம்:*
## *இஸ்ரவேலின் மன்னராட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும்*

*(1) ஒவ்வொரு புத்தகத்திற்குமான கருப்பொருளைப் பட்டியலிடுக:*

- *1 சாமுவேல்: இஸ்ரேலின் மன்னராட்சியின் ஆரம்பம்*
- *2 சாமுவேல்: தாவீது ராஜாவின் ஆட்சி*
- *1 & 2 ராஜாக்கள்: இஸ்ரவேல் ராஜாக்களின் தோல்வி*
- *1 & 2 நாளாகமம்: நம்பிக்கை உள்ளது*

*(2) சவுலின் ஆட்சியின் தொடக்கத்தில் தேவன் விரும்பிய ராஜாவாக இல்லாமல் அவன் தோல்வியுற்றதைக் காட்டும் மூன்று நிகழ்வுகளைப் பட்டியலிடுக.*

- *ஆசாரியராகிய சாமுவேலின் இடத்தில் தன்னை நிறுத்திக் கொண்டான்.*
- *ஏறக்குறைய யோனத்தானின் உயிரை போக்குமளவுக்கு அவசரகதியில் ஒரு பொருத்தனையைச் செய்தான்.*
- *அமலேக்கியர்களை முற்றிலுமாக அழிக்கவேண்டும் என்ற தேவனுடைய கட்டளைக்கு அவன் கீழ்ப்படியவில்லை.*

*(3) தாவீதுடனான தேவனின் உடன்படிக்கையின் ஐந்து வாக்குறுதிகளை பட்டியலிடுக.*

- *தேவன் இஸ்ரவேலுக்குப் பாதுகாப்பான வாசஸ்தலத்தை வழங்குவார்.*
- *தேவன் தாவீதின் குமாரனை ஆலயத்தைக்கட்டும்படி எழுப்புவார்.*

- *தேவன் தாவீதின் ராஜ்யத்தை என்றென்றைக்கும் நிலைநாட்டுவார்.*
- *தாவீதின் சந்ததியினருடன் பிதா-குமாரன் உறவை தேவன் ஏற்படுத்துவார்.*
- *தேவனுடைய இரக்கம் தாவீதின் வம்சத்தை விட்டு விலகாது.*

*(4) பாவத்தில் விழும் ஒரு விசுவாசிக்கு வழிகாட்டுவதற்கு, தாவீதின் பாவத்திலிருந்து நான்கு கொள்கைகளைப் பட்டியலிடுக.*

- *நாம் நமது பாவத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்.*
- *நம்முடைய பாவத்தின் தீவிரத்தை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.*
- *நாம் தேவனுடைய மன்னிப்பைப் பெறுவோம் என்று அவரை நாடி நம்ப வேண்டும்.*
- *நமது பாவத்தின் நீண்டகால பாதிப்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.*

*(5) 1 மற்றும் 2 ராஜாக்கள் எது வரையிலான ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளன?*

*கி.மு. 971-561*

*(6) இஸ்ரவேலின் பிளவுக்குப்பிறகு, எந்தக் கோத்திரங்கள் தாவீதின் ராஜாவுக்கு விசுவாசமாக இருந்தன?*

*யூதா மற்றும் பென்யமீன்*

*(7) 1 மற்றும் 2 ராஜாக்களில் ராஜாக்கள் எதன் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறார்கள்?*

*தேவனிடத்திலுள்ள உள்ள அவர்களின் விசுவாசத்தின் அடிப்படையில்*

*(8) யூதாவின் ராஜாக்களைப் பற்றிய நாளாகமம் மற்றும் ராஜாக்கள் புத்தகங்களின் உள்ளடக்கத்தை வேறுபடுத்திக் காண்க.*

- *“ராஜா தாவீதின் வழியில் நடந்தாரா?” என்று ராஜாக்களின் புத்தகங்கள் கேட்கின்றன.*
- *“ராஜா தேவாலய வழிபாட்டுக்கு உண்மையாக இருந்தாரா?” என்று நாளாகமங்களின் புத்தகங்கள் கேட்கின்றன.*

*(9) சாலமோனின் ஆட்சி நாளாகமத்திற்கு ஏன் முக்கியமானது?*

*அவர் தேவாலயத்தைக் கட்டினார்.*

*(10) மனாசே பற்றிய நாளாகமம் மற்றும் ராஜாக்கள் புத்தகங்களின் உள்ளடக்கத்தை வேறுபடுத்துக.*

- *யூதாவின் ராஜாக்களில் மனாசே மிகவும் மோசமானவன் என்று ராஜாக்கள் நூல் காட்டுகின்றது.*
- *சிறைப்பிடிக்கப்பட்டபோது மனாசேயின் மனந்திரும்புதலைப் பற்றி நாளாகமங்கள் நூல் கூறுகின்றது.*

*(11) 1 இராஜாக்கள் 9:4-7 மற்றும் 2 நாளாகமம் 7:13-14 ஆகிய வசனங்களை நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 6*
## *எஸ்றா – எஸ்தர்: மீட்டெடுத்தலின் புத்தகங்கள்*

*(1) மறுசீரமைப்புக் காலத்தின் முதன்மை நிகழ்வுகளுக்கான வருடங்களைப் பட்டியலிடுக.*

- *செருபாபேல் தலைமையில் முதல் குழு எருசலேமுக்குத் திரும்பிவருதல்:* ***கி.மு. 538***
- *தேவாலய கட்டிடப்பணியின் நிறைவு:* ***கி.மு. 516***
- *எஸ்தர் புத்தகத்தின் நிகழ்வுகள்:* ***கி.மு. 483-473***
- *எஸ்றா தலைமையில் இரண்டாவது குழு எருசலேமுக்குத் திரும்பிவருதல்:* ***கி.மு. 458***
- *நெகேமியா எருசலேமுக்குத் திரும்பிவருதல்:* ***கி.மு. 444***

*(2)) ஒவ்வொரு புத்தகத்திற்கும் கருப்பொருளைப் பட்டியலிடுக.*

- *எஸ்றா: சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல்*
- *நெகேமியா: மதிலை மீண்டும் கட்டுதல்*
- *எஸ்தர்: அனைத்தும் தேவனின் கட்டுப்பாட்டில் உள்ளன*

*(3) எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களுக்கு இடையே உள்ள இரண்டு ஒற்றுமைகளைப் பட்டியலிடுக.*

*ஏதேனும் இரண்டு:*

- *இரண்டும் ஒரே வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளன.*
- *இரண்டும் பெர்சியாவின் அர்தசஷ்டா I இன் கீழ் எருசலேமுக்குத் திரும்பியதைக் குறிப்பிடுகிறது.*
- *இரண்டிலும் திரும்பி வந்த யூதமக்களின் பட்டியல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.*

- *நெகேமியா 7-13 பகுதியானது எஸ்றா மற்றும் நெகேமியா இருவரின் சீர்திருத்தங்களைச் சுருக்கமாகக் கூறுகிறது.*

*(4)* ***பெர்சிய*** *பேரரசு தாங்கள் வென்ற தேசங்களின் மக்கள் அவரவரின் தாயகத்தில் இருக்க அனுமதித்தது.*

*(5)* ***ஆகாய்*** *மற்றும்* ***சகரியா*** *"தேவாலயத் தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.*

*(6) யூதர்களுக்கும் அவர்களது அண்டைதேசத்தாருக்கும் இடையே திருமணம் செய்வது ஏன் எஸ்றாவுக்கும் நெகேமியாவுக்கும் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது?*

- *எருசலேமின் அண்டைநாடுகள் அவிசுவாசிகளாக இருந்தனர்.*
- *பெர்சியா மதநம்பிக்கை விஷயத்தில்  கலப்புக் கொள்கையைக் கடைபிடித்தது.*

*(7) எந்த சிறிய தீர்க்கதரிசி நெகேமியாவின் கால அதே பிரச்சினைகளை எடுத்துரைக்கிறார்?*

*மல்கியா*

*(8) நெகேமியாவின் மூன்று தலைமைத்துவக் கொள்கைகளைப் பட்டியலிடுக.*

*ஏதேனும் மூன்று:*

- *ஆவிக்குரியத் தலைவர்கள் ஜனங்களைக் குறித்த தரிசனம் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.*
- *ஆவிக்குரியத் தலைவர்கள் கவனமாகத் திட்டமிடவேண்டும்.*
- *ஆவிக்குரியத் தலைவர்கள் தைரியமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.*
- *ஆவிக்குரியத் தலைவர்கள் சேவை மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள், சொந்த பேர்புகழுக்கு அல்ல.*

- *ஆவிக்குரியத் தலைவர்கள் ஜெபத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கிறார்கள்.*
- *ஆவிக்குரியத் தலைவர்கள் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு சீரமைத்துக் கொள்ளவேண்டும்.*

*(9) எஸ்தரில் கற்பிக்கப்படும் மூன்று முக்கிய பாடங்களைப் பட்டியலிடுக.*

- *தேவனுடைய இறையாண்மை*
- *விசுவாசமாக இருத்தலின் முக்கியத்துவம்*
- *துன்மார்க்கத்தின் மதியீனம்*

*(10) எஸ்தர் புத்தகத்துடன் இணைக்கப்பட்ட யூத விடுமுறை* **பூரிம்** *ஆகும்.*

*(11) நெகேமியா 2:17 மற்றும் எஸ்தர் 4:14ஐ நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 7*
## *யோபு மற்றும் சங்கீதம்: எபிரேய கவிதைகள்*

*(1) எபிரேய கவிதைகளின் ஒத்தத்தன்மையின் மூன்று வகைகளுக்கு வரையறையைத் தருக.*

- *ஒரே பொருளையுடைய ஒத்தத்தன்மை: இரண்டாவது வரி முதல் வரிக்கு ஒத்தசொற்களால் முதல் வரியை வலுப்படுத்துகிறது.*
- *நேர்எதிரான பொருளையுடைய ஒத்தத்தன்மை: இரண்டாவதுவரி முதல் வரியிலிருந்து வேறுபடுகிறது.*
- *செயற்கையான ஒத்தத்தன்மை : இரண்டாவதுவரி முதல்வரியின் கருத்தை மெருகூட்டும்.*

*(2) கரந்துறைப்பாட்டுக் கவிதைக்கு வரையறையைத் தருக.*

*கரந்துறைப்பாட்டுக் கவிதையில், ஒவ்வொரு சரணமும் எழுத்துக்களின் வரிசையில் அடுத்தடுத்த எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொல்லை வைத்துத் தொடங்குகிறது.*

*(3) யோபு புத்தகத்தின் முதன்மைக் கருப்பொருள் என்ன?*

*தேவனைத் தேடுதல்*

*(4) யோபுவின் நண்பர்களின் வாதத்தின் மூன்று முக்கியக் குறிப்புகள் யாவை?*

- *துன்பம் என்பது பாவத்திற்கான தண்டனையாக அல்லது திருத்தமாக வருகிறது.*
- *தேவன் நீதியுள்ள தேவன்.*
- *ஆகையால், யோபு ஏதோ ஒரு பாவத்தில் குற்றவாளியாக இருக்க வேண்டும், அதற்காகதான் தேவன் அவரைத் தண்டிக்கிறார்.*

*(5) யோபு28-31 இல் யோபுவின் உரைகளின் தலைப்புகள் யாவை?*

- *யோபு28 ஞானம் பற்றிய ஒரு கவிதை.*
- *யோபு29 யோபுவின் கடந்தகால வாழ்க்கையின் முன்னுரையின் நிகழ்வுகளுக்கு முந்தைய அவரது வாழ்க்கை.*
- *யோபு30 என்பது யோபுவின் தற்போதைய துன்பத்தின் நிலையாகும்.*
- *யோபு31 என்பது யோபுவின் உத்தமத்தன்மைக்கு சான்றாகும்.*

*(6) தனிப்பட்ட சங்கீதங்களின் தலைப்புகளில் காணப்படும் மூன்று வகையான தகவல்கள் யாவை?*

- *எழுத்தாளரின் பெயர்*
- *வரலாற்று அமைப்பு*
- *இசை மற்றும் வழிபாட்டு வழிமுறைகள்*

*(7) பெரும்பாலான புலம்பலின் சங்கீதங்களில் உள்ள நான்கு கூறுகள் யாவை?*

- *முறையீட்டின் விவரணம்*
- *தேவனிடம் விண்ணப்பம்*
- *தேவன் மேல் உள்ள நம்பிக்கையின் கூற்று*
- *தேவனுக்குத் துதி*

*(8) சாபமிடும் சங்கீதங்களைப் புரிந்துகொள்வதற்கான மூன்று கொள்கைகளைப் பட்டியலிடுக.*

- *அவை விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை.*
- *இஸ்ரவேலின் எதிரிகள் சந்தேகமின்றி தேவனுடைய எதிரிகள்.*
- *சங்கீதக்காரர்கள் காரியங்களைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்வதில்லை.*

*(9) ராஜரீக மற்றும் மேசியாவின் சங்கீதங்களுக்கு இடையே உள்ள தொடர்பு என்ன?*

> *பல ராஜரீக சங்கீதங்கள் இஸ்ரவேலின் வரலாற்றில் ஒருபோதும் நிறைவேற்றப்படாத ஒரு உலகளாவிய ஆட்சியை விவரிக்கின்றன. இவை இயேசுகிறிஸ்துவின் வாழ்விலும் ஊழியத்திலும் நிறைவேறுகின்றன..*

*(10) சங்கீதம் 119:1-8-ஐ நினைவிலிருந்து எழுதுக.*

> *(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## பாடம் 8
## நீதிமொழிகள் – உன்னதப்பாட்டு: எபிரேய ஞானம்

*(1) ஜான்கால்வின் கருத்துப்படி, உண்மையான ஞானம் எந்த இரண்டு காரியங்களைக் கொண்டுள்ளது?*

- *தேவனைப்பற்றிய அறிவு*
- *நம்மைப்பற்றிய அறிவு*

*(2) இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள நீதிமொழியின் நான்கு பண்புகளில் இரண்டைப் பட்டியலிடுக.*

*ஏதேனும் இரண்டு:*

- *ஒரு நீதிமொழி பொதுவான கொள்கையை கூறுகிறது.*
- *ஒரு நீதிமொழி வாழ்க்கை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது.*
- *ஒரு நீதிமொழி ஒரு வாக்குறுதி அல்ல; இது வாழ்க்கையைப் பற்றிய பொதுவான அவதானிப்பு.*
- *ஒரு நீதிமொழி ஒரு கட்டளை அல்ல.*

*(3) தொகுப்பு 1 (நீதிமொழிகள் 1–9) இல் மிகவும்பொதுவான நீதிமொழி என்ன?*

*உரையாடல் நீதிமொழிகள்*

*(4) நீதிமொழிகளை விளக்குவதற்கு இந்தப் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஏழு கேள்விகளில் நான்கைப் பட்டியலிடுக.*

*ஏதேனும் நான்கு:*

- *இந்த நீதிமொழி ஞானத்தை நோக்கிச் செல்கிறதா அல்லது மூடத்தனத்தை நோக்கிச்செல்கிறதா?*

- *நீதிமொழியின் இரண்டாம் பாதி முதல் பாதியில் என்ன சேர்க்கிறது?*
- *இந்த நீதிமொழியில் உள்ள ஞானத்தின் ஆதாரம் என்ன?*
- *இந்த நீதிமொழி எனது சூழ்நிலைக்கு எவ்வாறு பொருந்தும்?*
- *நீதிமொழிகளில் நான்படிக்கும் தலைப்புடன் தொடர்புடைய வேறு வசனங்கள் உள்ளதா?*
- *வேதாகமத்தின் மற்ற புத்தகங்கள் நான் படிக்கும் தலைப்பைக் குறிப்பிடுகின்றனவா?*
- *நான் படிக்கும் நீதிமொழியை விளக்கும் வேதாகம மாந்தர்கள் உள்ளனரா?*

*(5) நீதிமொழிகளில் உள்ள "பேதை" மற்றும் "மூடன்" ஆகியவற்றுக்கு இடையே உள்ள முதன்மை வேறுபாடு என்ன?*

*மூடன் ஞானத்தையும்போதனையையும்வெறுக்கிறான் ஆனால் பேதை கேட்பான்.*

*(6) பிரசங்கியின் முதன்மைக் கருப்பொருள்என்ன?*

*வாழ்க்கையின் அர்த்தத்திற்கான ஒரு தேடல்*

*(7) பிரசங்கி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு மையக்கருத்துக்கள் யாவை?*

- *மாயை*
- *மகிழ்ச்சி*

*(8) உன்னதப்பாட்டை விளக்குவதற்கான இரண்டு வழிகள் யாவை?*

- *உருவக விளக்கம்*
- *கவிதை விளக்கம்*

*(9) நினைவிலிருந்து நீதிமொழிகள் 1:7; பிரசங்கி 12:13-14-ஐ எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 9*
## *ஏசாயா: ஐந்தாவது சுவிசேஷ புத்தகம்*

*(1) எந்த சொற்றொடர் தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தையை மட்டுமே கொண்டுவந்தார்கள், மற்றும் தங்கள் சொந்த செய்தியை அல்ல என்பதைக் காண்பிக்கிறது?*

*"கர்த்தர் உரைக்கிறதாவது"*

*(2) தீர்க்கதரிசிகளை விவரிக்க* ***"ஞானதிருஷ்டிக்காரன்"*** *என்ற பெயரைப் பயன்படுத்துவது தேவன் தனது தீர்க்கதரிசிகளுக்கு எதிர்கால சத்தியங்களை வெளிப்படுத்தினார் என்பதைக் காட்டுகிறது.*

*(3) தீர்க்கதரிசன புத்தகங்கள் முழுவதும் தோன்றும் மூன்று கருப்பொருள்களை பட்டியலிடுக.*

- *உடன்படிக்கைக்கு விசுவாசம்*
- *கர்த்தருடைய நாள்*
- *மேசியாவின் வருகை*

*(4) கர்த்தருடைய நாள் மூன்று அம்சங்களை உள்ளடக்கியது. அவை என்ன?*

- *அவிசுவாசிகளுக்கு நியாயத்தீர்ப்பு காலம்*
- *தேவனுடைய ஜனங்களை சுத்திகரிக்கும் காலம்*
- *விசுவாசிக்கிறவர்களுக்கு இரட்சிப்பின் காலம்*

*(5) யூதாவின் எந்த நான்கு ராஜாக்களின் ஆட்சியின்போது ஏசாயா ஊழியம் செய்தார்?*

- *யோதாம்*
- *ஆகாஸ்*
- *எசேக்கியா*
- *மனாசே*

*(6) ஏசாயா புத்தகத்தின் இரண்டு நோக்கங்களைப் பட்டியலிடுக.*

- *யூதாவை வரவிருக்கும் நியாயத்தீர்ப்பினால் எச்சரித்தல்*
- *யூதாவை இரட்சிப்பின் வாக்குறுதியினால் ஆறுதல்படுத்துதல்*

*(7) ஏசாயாவில் மீதியாயிருப்பவர்கள் யார்?*

*முழு தேசத்தின் துரோகத்தையும் மீறி தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள்*

*(8) தேவனுடைய பரிசுத்தத்தையும் தேவனுடைய இறையாண்மையையும் காட்ட ஏசாயாவில் தேவனுடைய என்ன பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது?*

*இஸ்ரவேலின் பரிசுத்தர்*

*(9) முழு ஏசாயா புத்தகத்தின் எழுத்தாளராக ஏசாயாவை ஏற்றுக்கொள்வதற்கு மூன்று காரணங்களைப் பட்டியலிடுக.*

- *ஏசாயா 1:1ஏசாயாவை எழுத்தாளராகக் குறிப்பிடுகிறது.*
- *ஏசாயாவின் அனைத்து எபிரேய பிரதிகளும் புத்தகத்தை ஒரே புத்தகமாகக் காட்டுகின்றன.*
- *புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் முழு புத்தகத்தின் எழுத்தாளராக ஏசாயாவையேக் கருதுகின்றனர்.*

*(10) புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட ஏசாயாவின் இரண்டு சித்திரங்களைப் பட்டியலிடுக.*

*ஏதேனும் இரண்டு:*

- *யோவான்ஸ்நானகன் வனாந்தரத்தில் கூப்பிடும் சத்தம்*
- *இயேசுவின் கன்னிப்பிறப்பு*
- *இயேசுவினுடைய உவமைகளின் பயன்பாடு*

- *புறஜாதிகளுக்கு இயேசுவின் ஊழியம்*
- *தேசங்களின் மனமாற்றம்*

*(11) ஏசாயா 9:6-7-ஐ நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரி பார்க்கவும்.)*

# *பாடம் 10*
# *எரேமியா மற்றும் புலம்பல்: அழுகையின் தீர்க்கதரிசி*

*(1) எரேமியா ஏன் "அழுகையின் தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறார்?*

> *தேவனுடைய ஜனங்களின் பாவத்திற்காகவும் தேவனுடைய நகரத்தின் அழிவுக்காகவும் புலம்பியதால் எரேமியா "அழுகையின் தீர்க்கதரிசி" என்று அழைக்கப்படுகிறார்.*

*(2) எரேமியாவின் குடும்பப் பின்னணி என்ன?*

> *எரேமியாவின் தகப்பன் ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகும்.*

*(3) சிறைப்பிடிக்கப்பட்டு மூன்று குழுக்களாக நாடு கடத்தப்பட்ட வருடங்களைப் பட்டியலிடுக. முதல் இரண்டு குழுக்களுடன், நாடு கடத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசியைக் குறிப்பிடுக.*

- *தானியேல்,கி.மு. 605*
- *எசேக்கியேல், கி.மு. 597*
- *கி.மு. 586*

*(4) எரேமியா மற்றும் புலம்பலின் பிரதான நோக்கங்கள் யாவை?*

- *வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து யூதாவை எச்சரித்தல்*
- *எருசலேமின் அழிவைப் பதிவு செய்தல்*

*(5) "தீர்க்கதரிசன வழக்காடுதல்" என்றால் என்ன?*

> *இஸ்ரவேல் தேவனுடன் செய்த உடன்படிக்கையை முறித்துவிட்டதாக தீர்க்கதரிசிகள் எடுத்துரைக்கும் குற்றச்சாட்டு*

*(6) "எரேமியாவின் அறிக்கைகள்" என்பவை யாவை?*

> *எரேமியா தனது செய்தியைக் கேட்பவர்களின் பிடிவாதத்தைக் குறித்து தேவனிடம் புகாரளிக்கும் ஜெபங்கள்*

*(7) எரேமியாவில் உள்ள "ஆறுதலின் புத்தகம்" என்றால் என்ன?*

> *தேவன் யூதா தேசத்தை மீண்டும் மீட்டெடுப்பார் என்று உறுதியளிக்கும் அதிகாரங்கள்*

*(8) புலம்பல் புத்தகத்தில் உள்ள 5 அதிகாரங்களில் 4-ஆம் அதிகாரத்தில் எந்த கவிதை வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது?*

> *முதலெழுத்துப்புதிர் கவிதை*

*(9) புலம்பல் 3:21-24 வரையிலுள்ள வசனங்களை நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரி பார்க்கவும்.)*

## *பாடம் 11*
## *எசேக்கியேல் மற்றும் தானியேல்:*
## *சிறையிருப்பின் தீர்க்கதரிசிகள்*

*(1) எசேக்கியேல் என்ற பெயரின் அர்த்தம் என்ன?*

*"தேவன் பலப்படுத்தியிருக்கிறார்."*

*(2) எசேக்கியேல் புத்தகத்தின் நோக்கம் என்ன?*

*எசேக்கியேல் புத்தகம் நம்பிக்கையின் செய்தியைக் கொண்டுள்ளது—தேவன் தம்முடைய ஜனங்களைக் கைவிடவில்லை என்பதாகும்.*

*(3) எரேமியாவின் தேவாலய பிரசங்கத்திற்கு எசேக்கியேலின் இணை என்ன?*

*தேவாலயத்திலிருந்து தேவனுடைய மகிமை புறப்பட்டுச் செல்லுதல் (எசேக்கியேல்10-11)*

*(4) புதிய தேவாலயத்தைப் பற்றிய எசேக்கியேலின் தரிசனத்தை விளக்குவதற்கு ஏதுவான ஐந்து வேறுபட்ட கண்ணோட்டங்களைப் பட்டியலிடுக.*

- *இஸ்ரவேல் எருசலேமுக்குத் திரும்பிய பிறகுதேவாலயத்தை மீண்டும் கட்டும் வாக்குறுதி*
- *பூமிக்குரிய ஆயிரமாண்டு அரசாட்சியின் சித்திரம்*
- *திருச்சபையில் தேவனுடைய கிரியையின் சித்திரம்*
- *புதியவானம் மற்றும் புதியபூமியில் தேவன் தம்முடைய ஜனங்களிடையே இருப்பார் என்பதற்கான உருவகம்*
- *நேரடி மற்றும் அடையாளக்கூறுகள் ஆகிய இரண்டையும் கொண்ட ஒரு தரிசனம்*

*(5) எசேக்கியேல் பாபிலோனுக்கு கி.மு.**597** இல் கொண்டு செல்லப்பட்டார்.*

*தானியேல் பாபிலோனுக்கு கி.மு.**605** இல் கொண்டு செல்லப்பட்டார்.*

*(6) தானியேல் புத்தகத்தில் மையமாக உள்ள மூன்று கருப்பொருள்கள் யாவை?*

- *மனித வரலாற்றில் தேவனுடைய இறையாண்மை*
- *மனிதகுலத்தின் பெருமை*
- *தேவனுடைய ஜனங்களின் முடிவான வெற்றி*

*(7) தானியேல் புத்தகத்தில் எந்த இரண்டு மொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன?*

*எபிரேயம் மற்றும் அராமியமொழிகள்*

*(8) பாரம்பரிய விளக்கத்தில், இந்த சித்திரங்கள் ஒவ்வொன்றும் எந்தப் பேரரசைக் குறிக்கின்றன?*

- *கழுகின் சிறகுகள் கொண்ட சிங்கம்:* ***பாபிலோன்***
- *கரடி:* ***மேதிய-பெர்சியா***
- *ஒரு பெரிய கொம்புடன் உள்ள வெள்ளாட்டுக்கடா:* ***கிரீஸ்***
- *இரும்பினால் ஆன கால்கள், இரும்புமற்றும்களிமண்ணினால் ஆன பாதங்கள்:* ***ரோம்***
- *பெரிய பர்வதமாக மாறும் கல்:* ***தேவனுடைய ராஜ்யம்***

*(9) எந்த வேதாகமப் புத்தகங்கள் முதன்மையாகவோ அல்லது பகுதியாகவோ அப்போகாலிப்டிக் எழுத்தால் ஆனவை?*

- *தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் இரண்டும் அப்போகாலிப்டிக் எழுத்தால் ஆனவை*
- *எசேக்கியேல் மற்றும் சகரியாவின் பகுதிகள் அபோகாலிப்டிக் எழுத்தால் ஆனவை*

*(10) எந்த புதிய ஏற்பாட்டு புத்தகம் எசேக்கியேல் மற்றும் தானியேலை அடிக்கடி மேற்கோள் காட்டுகிறது?*

வெளிப்படுத்தின விசேஷம்

*(11) எசேக்கியேல் 36:25-27-ஐ நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 12*
## *சிறிய தீர்க்கதரிசிகள் 1: ஓசியா, யோவேல், ஆமோஸ்*

*(1) எபிரேய வேதாகமத்தில் சிறிய தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுபவை எத்தனை?*

*பன்னிரண்டு புத்தகங்கள்*

*(2) பெரிய தீர்க்கதரிசிகளுக்கும் சிறிய தீர்க்கதரிசிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?*

*சிறு தீர்க்கதரிசிகள் மிகவும் சிறிய புத்தகங்கள்*

*(3) கி.மு. 8-ஆம் நூற்றாண்டின்போது வடக்கு ராஜ்யத்தின் பொருளாதார மற்றும் ஆவிக்குரிய நிலைமைகளை விவரிக்கவும்.*

*பொருளாதார செழிப்பு மற்றும் ஆவிக்குரிய துரோகம்*

*(4) ஓசியா புத்தகத்தின் முக்கிய நோக்கம் என்ன?*

*இஸ்ரவேலை அவர்களின் ஆவிக்குரிய விபச்சாரத்தோடு எதிர்கொள்ளல்*

*(5) ஓசியாவின் ஒவ்வொரு பிள்ளைகளின் பெயர்களும் இஸ்ரவேலுக்கு என்ன தீர்க்கதரிசனம் கூறுகின்றன?*

- *யெஸ்ரயேல்– அசீரியா இஸ்ரவேலை தோற்கடிக்கும் பள்ளத்தாக்கு*
- *லோருகாமா – இரக்கஞ்செய்வதில்லை*
- *லோகம்மீ – நீங்கள் என் ஜனமல்ல*

*(6) பழையஏற்பாட்டில், "அறிந்துகொள்க" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?*

> *"அறிந்து கொள்ளுதல்" என்பது பழைய ஏற்பாட்டில் ஒரு உறவோடு தொடர்புடைய சொல். அறிந்து கொள்ளுதல் என்பது அனுபவிப்பதைக் குறிக்கிறது.*

*(7) யோவேலின் முதன்மைக் கருப்பொருள் என்ன?*

> *கர்த்தருடைய நாள்*

*(8) யோவேலில், இயற்கைப் பேரழிவு மூலம் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு பற்றிய தீர்க்கதரிசனம் என்ன?*

> *வெட்டுக்கிளி வாதை*

*(9) புதிய ஏற்பாட்டின்படி, வரவிருக்கும் ஆவிக்குரிய விழிப்புணர்வு பற்றிய யோவேலின் தீர்க்கதரிசனம் எப்போது நிறைவேறும்?*

> *பெந்தெகொஸ்தே நாளில்*

*(10) ஆமோஸ் புத்தகத்தின் நோக்கம் என்ன?*

> *தேவனோடும் இஸ்ரவேலரின் சக மனிதரோடும் காண்பித்த அவர்களுடைய அநீதியான நடத்தையின் காரணமாக–தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வரும் என்கிற தீர்க்கதரிசனத்தை உரைத்தல்*

*(11) ஆமோஸில் நியாயத்தீர்ப்பின் ஐந்து தரிசனங்களைப் பட்டியலிட்டு அவற்றின் அர்த்தத்தைத் தருக.*

- *வெட்டுக்கிளிவாதை இஸ்ரவேலுக்கு வரப்போகும் அழிவைக் குறிக்கிறது.*
- *அக்கினி என்பது இஸ்ரவேலுக்கு வரப்போகும் அழிவைக் குறிக்கிறது.*
- *ஒரு தூக்குநூல் இஸ்ரவேல் மாறுபாடுள்ளதாய் இருப்பதைக் காண்பிக்கிறது.*

- *பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை இஸ்ரவேல் உடனடி நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாக இருக்கிறது என்பதைக் காட்டியது.*
- *தேவன் பலிபீடத்தின் அருகே நிற்பது என்பது நியாயத்தீர்ப்பு நிச்சயம் என்று அர்த்தம்.*

*(12) ஓசியா 10:12; யோவேல் 2:13; ஆமோஸ் 5:24 ஆகிய வசனங்களை நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 13*
## *சிறியதீர்க்கதரிசிகள் 2: புறஜாதி தேசங்களுக்கான தீர்க்கதரிசிகள்*

*(1) ஒபதியா புத்தகத்தின் நோக்கம் என்ன?*

> *பாபிலோன் எருசலேமை முற்றுகையிட்டபோது ஏதோம் யூதாவுக்கு செய்த கொடுமையின் காரணமாக அதன்மீது வரும் அழிவை தீர்க்கதரிசனம் கூறுவது*

*(2) யோனா புத்தகத்தின் கருப்பொருள் என்ன?*

> *சகல ஜனத்திற்குமான தேவனின் கிருபை*

*(3) யோனாவின் புத்தகம் தேவனுடைய இறையாண்மையைக் காட்டும் இரண்டு வழிகளைப் பட்டியலிடுக.*

> *ஏதேனும் இரண்டு:*

- *தேவன் ஒரு பெருங்காற்றை வரவிட்டார், அது கப்பலுக்குபெருங்கொந்தளிப்பை உண்டாக்கியது.*
- *யோனாவை விழுங்க தேவன் ஒரு பெரிய மீனை ஆயத்தம் பண்ணினார்.*
- *யோனாவுக்கு அடைக்கலம் கொடுக்க தேவன் ஒரு ஆமணக்குச் செடியை ஆயத்தம் பண்ணினார்.*
- *தேவன் ஆமணக்குச் செடியை அரித்துப்போட ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்.*

*(4) யோனாவில் கற்பிக்கப்படும் இரண்டு பாடங்கள் யாவை?*

> *கீழ்ப்படிதலில் ஒரு பாடம் மற்றும் இரக்கம் காண்பித்தலில் ஒரு பாடம்*

*(5) மீகாவின் கூற்றுப்படி, நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை எந்த மூன்று பண்புகள் சுருக்கமாகக் கூறுகின்றன?*

- *நியாயம்*
- *இரக்கம்*
- *தேவனிடத்தில் மனத்தாழ்மை*

*(6) மீகாவில் இயேசுவின் பிறப்பைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனம் என்ன?*

*அவர் பெத்லகேமில் பிறப்பார்.*

*(7) நாகூம் புத்தகத்தின் செய்தியைப் பெற்றுக்கொண்டவர்கள் யார்?*

*நினிவே பட்டணத்தார்*

*(8) ஆபகூக்கின் இரண்டு கேள்விகளையும் தேவனுடைய பதில்களையும் பட்டியலிடுக.*

*கேள்வி: பொல்லாத யூதா தேசம் ஏன் செழிக்கிறது?*

*பதில்: பாபிலோன் யூதாவை நியாயந்தீர்க்கும்.*

*கேள்வி: யூதாவை நியாயந்தீர்க்கதேவன் பாபிலோனை எப்படிப் பயன்படுத்தலாம்?*
*பதில்: நான் சொல்வதுபோலவே சம்பவிக்கும். ஆனால் விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்.*

*(9) செப்பனியாவின் முதன்மைக் கருப்பொருள் என்ன?*

*கர்த்தருடைய நாள்*

*(10) பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை விளக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட ஐந்து படிகள் யாவை?*

- *அவர்களின் பட்டணம்: தீர்க்கதரிசியின் முதல் செய்தி என்ன?*
- *நதி: செய்தியைக் கேட்கும் இன்றைய மக்களையும் இதே செய்தியைக் கேட்ட அன்றைய மக்களையும் வேறுபடுத்துகிறது எது?*
- *பாலம்: தீர்க்கதரிசியின் முதல்செய்தியின் பின்னணியில் உள்ள கொள்கை என்ன?*
- *வரைபடம்: மற்ற வேதப்பகுதியில் இந்த கொள்கை எவ்வாறு காணப்படுகிறது?*
- *நமது பட்டணம்: இன்றைய உலகில் இக்கொள்கை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?*

*(11) மீகா 6:8; நாகூம் 1:7-8; மற்றும் ஆபகூக் 3:2ஐ நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*

## *பாடம் 14*
## *சிறிய தீர்க்கதரிசிகள் 3: சிறையிருப்புக்குப் பிந்தைய தீர்க்கதரிசிகள்*

*(1) சிறையிருப்பிற்குப் பிந்தைய தீர்க்கதரிசிகளால் எந்த மூன்று ஆவிக்குரிய பிரச்சனைகள் எடுத்துரைக்கப்பட்டன?*

- *தேவாலயம் மீண்டும் கட்டப்படவில்லை.*
- *அவிசுவாசிகளான புறஜாதிகளுடன் திருமணம் செய்துகொள்வது மதசமரசத்திற்கு வழிவகுத்தது.*
- *பல யூதர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டனர்.*

*(2) ஆகாய் மற்றும் சகரியா புத்தகங்கள் எழுதப்பட்ட காலம் என்ன?*

*கி.மு. 520*

*(3) ஆகாய் நான்கு செய்திகளைக் கொண்டுவந்தார். ஒவ்வொரு செய்திக்கும் தலைப்பைப் பட்டியலிடுக.*

- *முன்னுரிமைகள்*
- *ஊக்கமின்மை*
- *கீழ்ப்படியாமை*
- *பயம்*

*(4) சகரியாவின் கருப்பொருள் என்ன?*

*தேவனுடைய ராஜ்யத்தின் மறுசீரமைப்பு*

*(5) சகரியாவில் காணப்படும் மேசியாவைப் பற்றிய இரண்டு தீர்க்கதரிசனங்களைப் பட்டியலிடுக.*

*ஏதேனும் இரண்டு:*

- *நீதியுள்ள கிளை*

- *ராஜா தாழ்மையுடன் கழுதையின் மீது சவாரி செய்தல்*
- *மேய்ப்பன் நிராகரிக்கப்பட்டு முப்பது சேக்கல்வெள்ளிக்கு விற்கப்படுதல்*
- *குத்தப்பட்டவர்*
- *வருகிறவராகிய நியாயாதிபதி*

*(6) மல்கியா கி.மு. 475 மற்றும் 425க்கு இடையில் பிரசங்கித்ததாக நாம் ஏன் நம்புகிறோம்?*

*எஸ்றா மற்றும் நெகேமியா உரைக்கின்ற அதே பாவங்களை மல்கியாவும் குறிப்பிடுகிறார்.*

*(7) மல்கியாவில் தேவனுடைய ஒவ்வொரு "விவாதங்களின்" மூன்று பகுதிகளையும் பட்டியலிடுக.*

- *யூதாவின் நடத்தைக் குறித்து தேவன் ஒரு அறிக்கையை வெளியிடுகிறார்.*
- *ஜனங்கள் ஒரு கேள்வியுடன் பதிலளிக்கின்றனர்.*
- *தேவன் அவர்களின் கேள்விக்குப் பதிலளிக்கிறார்.*

*(8) ஆகாய் 2:7-9 மற்றும் மல்கியா 3:1-ஐ நினைவிலிருந்து எழுதுக.*

*(மனப்பாடம் செய்யப்பட்ட வசனங்களை வேதாகமத்தின் துணை கொண்டு சரிபார்க்கவும்.)*